# 100 நாள் வேலை - காந்தி கணக்கில்

கடந்த செப்டம்பர் மாத இறுதியில் கிராமத்திற்குச் சென்றபோது, மழை நன்கு பெய்து நாற்று நடும் விவசாயப் பணிகயில் யாவும் சுணக்கத்தில் இருந்தது. கடந்த காலங்களில், செப்டம்பர் மாதத்தில் விவசாயப் பணிகள் ஓய்வு, தொய்வு இல்லாமல் நடக்கும். ஆனால் இந்த வருடம் இப்படி உள்ளதே? என விசாரிக்கும்போது வேலைக்கு ஆட்கள் இல்லை என்று கூறினார்கள். காரணம் என்னவெனில், இதுவரை வேலைக்கு வந்தவர்கள் 100 நாள் வேலை திட்டத்திற்கு  சென்று விட்டனர் என்று விவசாயிகள் கவலையோடு குறிப்பிட்டனர். கிராம ராஜ்யம் என்ற கனவை கண்ட காந்தியடிகளின் பெயரில் மத்திய அரசு இத்திட்டத்தை அறிவித்தது. ஆனால், இத்திட்டம் முழுமையாக பயன் அளிக்கவில்லை என்பதுதான் பலரின் கருத்து.

நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளைவாக மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை குறைக்க, மத்திய நிதி அமைச்சகம் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நூறு நாள் திட்டத்திற்கான ஒதுக்கீடுயும் குறைக்கப்படும் அல்லது திட்டத்தை திரும்ப பெற வாய்ப்பு உள்ளது என அறிவிக்கப்பட்டது. இதற்கு மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், ஜெயராம் ரமேஷ் கடும் எதிர்ப்பு தெரிவித்து, பிரதமருக்கு அவர் எழுதிய கடிதத்தில், " மத்திய அரசுடன் பல திட்டங்கள் பெரும்பாலும், ஏழை மக்களை இலக்கு வைத்தே நடைமுறையில் உள்ளது. ஊரக பகுதி நூறு நாளுக்கு வேலை அளிக்கும் திட்டம், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்துக்கு மிக  முக்கியமானது. எனவே, இத்திட்டத்துக்கான ஒதுக்கீட்டைக் குறைக்கக் கூடாது. இதை மீறி, நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்தால், பல எதிர்வினைகள் ஏற்படும் என அமைச்சர் ஜெயராம் ரமேஷ் சொல்லியிருந்தார்.

அமைச்சரின் இந்த கருத்துக்கு மத்திய அரசு எந்த அறிவிப்பையும் வெளிப்படையாக சொல்லவில்லை. ஆனால் வரும் நாடளுமன்ற தேர்தலின்

வாக்கு வங்கியை மனதில் கொண்டு இத்திட்டத்தை ரத்து செய்யவில்லை.

நூறு நாள் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்படும். நிதி ஒதுக்கீட்டில் தாமதம் ஏற்பட்டால் நடப்பு நிதியாண்டின், அக்டோபர் முதல் மார்ச் வரையிலான, இரண்டாவது அரையாண்டில், நூறு நாள் திட்டத்தை செயல்படுத்துவது கடினம்  என்று பல மாநில அரசுகள் கருத்துத் தெரிவித்தன. தமிழக அரசு கேட்ட இத்தொகையில், 4,690 கோடி ரூபாயை, இரு தவணைகளில் மத்திய அரசு இத்திட்டத்தையும் ஒதுக்கியுள்ளது. தமிழகம் வேண்டிய தொகையில் 1.652 கோடி ரூபாய் மட்டுமே இன்னும் ஒதுக்கப்பட வேண்டும். ஏற்கனவே ஒதுக்கிய தொகையில், 60 முதல் 70 சதவீதத் தொகையை செலவிட்டதற்கான கணக்கை தமிழக அரசு அறிவித்தால், மீதமுள்ள தொகையையும் மத்திய அரசு வழங்கும்.

பொதுவாக, நாடு முழுவதும் மொத்தமாக ஒதுக்கப்படும் திட்டக் தொகையில் இருந்து தான், நிதி குறைப்பு இருக்கும். அப்படி குறைக்கும் தொகையும், நூறு நாள் திட்டத்தை செயல்படுத்துவதில், பின் தங்கியுள்ள மாநிலங்களுக்குத் தான் குறைக்கப்படும் என மத்திய அரசு கூறியுள்ளது. ஆனால், இத்திட்டம் வெற்றி பெற்றதா ? உண்மை என்ன என்று பார்த்தால் இதிலும் ஊழல், குளறுபடிகள் கண்முன் தோன்றுகிறது. இத்திட்டத்தை 2.2.2005 அன்று ரூ.27,949 கோடி மதிப்பீட்டில் துவக்கியபோது, கிராமப்புறத்தில் வேலை வாய்ப்பு, வறட்சி நிவாரணம், கிராமப்புற வளர்ச்சி என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்ட திட்டம், திசைமாறி வளர்ச்சி என்ற இலக்கை எட்டாமல் அரசு கஜானா காலியாகும் இலக்கை மட்டும் எட்டியுள்ளது. இதனால் கிராமப்புறங்களில் விவசாயம் பாழ்பட்டு விட்டது.

கிராம ஊராட்சிகளில் வாழும் குடும்ப உறுப்பினர்களுக்கு வருடத்திற்கு 100 நாள் வேலை இத்திட்டத்தில் உறுதி செய்யப்படும் என மத்திய அரசு சொல்லியது. 2011-12 - இல் நாளொன்றுக்கு ஊதியம் ரூ.119/- என்பதை 2013-13ல் ரூ.148/- க்கு உயர்த்தப்பட்டது. ஊரகப் பகுதியில் திறன் சாரா உடல் உழைப்பை தர விருப்பமுள்ளவர்கள் இதில் பங்கு பெறலாம். இவர்களின் மூலம் ஏரி, குளம் மண்சரிவு, மராமத்து, நீர் ஆதாரங்கள் சீர் செய்தல், வாய்க்கால் - வரப்பு சரி செய்தல், கிராமப்புற குடிநீர் வசதிகள் பெற அடிப்படை மண், பூமியை சரி செய்வது இப்படியான வேலைகள்.

இத்திட்டத்திற்கு தமிழகத்தில் கடந்த மார்ச் 2013 வரை ரூ.3661 கோடி செலவானது என்று கணக்கு காட்டியுள்ளது; 2010-11இல் 49.60 இலட்சம், 2011-12இல் 58.16 இலட்சம், 2012-13இல் 150 நாள் வேலை என்று மாற்றியபின் 67 இலட்ச குடும்பங்கள் பயன்பெற்றன என்று புள்ளி விபரங்கள் தமிழக அரசு கூறியுள்ளது. தமிழகத்தில், தினந்தோறும், 2 லட்சம் கிராமபுற தொழிலாளர், நூறுநாள் திட்டம் மூலம் வேலை பெறுகின்றனர்.

இப்படி பல புள்ளி விபரங்கள் அரசு அறிவிப்பில் உள்ளது. ஆனால் இதில் பலமுறை முறைகேடுகள் நடந்துள்ளதாகத் தெரிகிறது. இதை தீவிர விசாரித்தபோது, இராமநாதபுரம் மாவட்டத்தில், திருவாடானை கல்லூர் பஞ்சாயத்து, பாரதி நகரைச் சேர்ந்த நாகநாதன் உயர்நீதிமன்றத்தில் ஒரு மனுவினைத் தாக்கல் செய்திருக்கிறார். ஆண்டுக்கு நூறு நாள் வேலை அளிக்கும். தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில், திருவாடானை பஞ்சாயத்து யூனியன், கல்லூர் பஞ்சாயத்தில் இறந்தவர்கள், வெளிநாடுகளில் வேலை பார்ப்போர், அரசு வேலையில் இருப்போர், வேறு ஊர்களைச் சேர்ந்தவர்கள் பெயர்களை எல்லாம் வேலை பார்த்ததாகக் கூறி போலி ஆவணம் தயாரித்து இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்று நாகநாதன் தனது மனுவிலே தெரிவித்திருக்கிறார்.

சான்றாக, பாரதி நகரைச் சேர்ந்த முத்து என்பவர் 2009 ஆம் ஆண்டே இறந்துவிட்டாராம். அவர் வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில் பணி புரிந்ததாகப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதாம். கல்லூர் பஞ்சாயத்து துணைத்தலைவரின் தந்தை சுந்தரராஜன், 2010இல் இறந்துவிட்டார். அவர் வேலைசெய்ததாகப் பணம்

பெறப்பட்டுள்ளது. இறந்தவர்கள் 16 பேர் பெயரில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. கல்லூர் பஞ்சாயத்துச் செயலாளர் ராதாதேவி, பாரதி நகர், நூலகர் முத்து ராமலிங்கம் உட்பட 12 அரசு அலுவலர்கள், வெளிநாடுகளில் பணிபுரியும் மகாதேவி, மகேஸ்வரி, கண்ணன் உட்பட 9 பேர் பெயரில் போலி வேலை அட்டை தயாரித்து மோசடி செய்யப்பட்டுள்ளது. வேலை பார்க்காத 62பேர் பெயரில், வேலை பார்த்ததாக ஆவணம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தவறுகளைக் குறிப்பிட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதற்கிடையே மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் செய்தியாளர்களிடம் கூறும்போது, “ மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தை தமிழக அரசு சரியாக செயல்படுத்தவில்லை; இத்திட்டத்துக்கு தமிழகத்துக்கு ஆண்டுக்கு ரூ.4,300 கோடி வழங்குகிறோம்; உரிய பணிகள் நடக்காமலேயே பணம் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதி அனைத்தையும் பயன்படுத்திவிட்டதாக தமிழக அரசு கணக்குக் காட்டியுள்ளது. ஆனால் முடித்த பணிகள் 43 சதவிகிதம் தான் என்று இந்தியத் தணிக்கைத் துறைதெரிவித்திருக்கிறது. கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில் பணி வாய்ப்புகள் வழங்கப்பட்டதாக தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. ஆனால் வெறும் 24 சதவிகிதக் குடும்பங்களே பணி வாய்ப்பைப் பெற்றன என்றும் தணிக்கைத் துறை மேலும் தெரிவித்திருக்கிறது.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி பகுதியில் 100 நாள் வேலை திட்டம் நடந்த இடத்தில் விசாரித்தபோது ஒருவருக்கு ரூ.45முதல் ரூ.55வரையே வழங்கப்பட்டது. இவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.148வீதம் வழங்கப்பட வேண்டும். ஆனால் வழங்கவில்லை. அதேபோல 80பேர் பணியாற்றுவதாக வருகைப் பதிவேட்டில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட இடத்தில் 50 பேர் வரையே பணியாற்றுகின்றனர். மீதி தொழிலாளர்களின் சம்பளத்தை சிலர் சுரண்டுகின்றனர். இதுபோன்ற இத்திட்டத்தில் மோசடி நாடு முழுவதும் நடக்கிறது.

தமிழகத்தில் உள்ள 12, 524 ஊராட்சிகளில் இவ்வளவு முறைக்கேடுகள். அதிகார வர்க்கம், இடைத்தரகர்கள் எனத் தாண்டி இத்திட்டம் கிராமப்புறத்தில் வேலைக்கு வருபவர்களுக்கு ரூ.148/- கிடைப்பது இல்லை. வெறுமனே ரூ.75/- லிருந்து ரூ.80/- வரை அந்த தொகை அதிகம் என நினைக்க வேலையும் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நடைபெறுவது இல்லை. வெட்டியாக அரசாங்க பணம் வீணடிக்கப்படுகிறது. மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் அவர்கள் இத்திட்டத்தை நிரந்தரமாக நடத்த முடியாது; 20,25 ஆண்டுகள் வரை தான் இதைச் செய்ய முடியும் என்று கூறினார். இனிமேல் 100 நாள் வேலைக்கு 25 நாட்களுக்கு வந்தவர்களுக்கு ஒரு

செல்போன் தர கூடுதலாக ரூ.4,850 கோடி மதிப்பில் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதை கணினி முறையில் கொண்டுவரவும் திட்டம். இதே ஆக்கபூர்வமாக மத்திய அரசு வழங்கும். ரூ.148/- டோடு விவசாய வேலைக்குச் சென்றால், சம்பந்தப்பட்ட விவசாயி கூலியாக கொடுக்கும் பணம் சேர்த்தல் வேலைக்கு செல்வோருக்கு அதிகபடியான கூலி கிடைக்கும். அது மட்டுமல்லாமல் விவசாய வேலைகள் சீராக கிராமபுறத்தில் நடக்கும்.

பிரச்சனைகள் எழுந்தபோது, மத்திய அரசு 2012 இல் டாக்டர் மிகீர் ஷா தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து குறைபாடுகள் ஆய்ந்து பல பரிந்துரைகள் வழங்கியும், இவை நடைமுறைக்கு வந்தபோது இத்திட்டத்தில் உள்ள சீர்கேடுகள் கலைந்தபாடு இல்லை. வெளிப்படையாக இல்லாமல் இத்திட்டம் வெறும் விளம்பரத்தில் நடக்கிறது. இதன் மூலம் கிராமப்புறங்களில் அடிப்படையான
கட்டமைப்புப் பணிகளும் சீராக அமையவில்லை. வேலைக்கு வருவோருக்கு ரூ.148/-ம் முழுமையாக செல்வதும் இல்லை. கணினி நிர்வாகம் என்றதும், கணினி இதற்கு பயன்படாமல்தான் இருக்கும். வெறுமனே ஊராட்சி அலுவலகங்கள் ஒருபுறத்தில் மூட்டை கட்டி போடபடும். கைப்பேசி மூலம் நிர்வகிக்கும் அளவு வேலைக்கு வருவோருக்கு கைப்பேசியில் குறுஞ்செய்தி கூட அனுப்ப முடியாது. இப்படியான சீர்திருத்தங்கள் எல்லாம் வெட்டி வேலையாக
முடியும்.

திட்ட குழுவின் அறிக்கையின்படி கிராமப்புறத்தில் ரூ.25, நகரப்புறத்தில் ரூ.32 பெறுபவர்கள் வறுமைக் கோட்டிலுள்ள ஏழைகள் என கருத முடியாது என்ற தப்பான, சாத்தியமில்லாத கருத்துக்கு ஆமோதிக்கும் வகையில் மட்டுமே இத்திட்டம் பயன்படும். மற்ற வகையில் எவ்வித பொது நலன் கிராமப்புற ஏழைகள் வாழ்வாதாரத்திற்கும் பயன்படுவது இல்லை. இப்படியான குளறுபடிகளுக்கு ஆட்பட்டுள்ள இத்திட்டத்தை என்று சீர்மைக்க வேண்டும். இல்லையெனில், நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டம் 30%  மதிப்பெண்ணுடையதாக இருக்கும்.
பயன்பாட்டு அய்யோ மகாத்மா பெயரில் உள்ள இந்த திட்டத்திலும் காந்தி கணக்கா ?